**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.**9/2023

பெயர்–திரு.தன்ராஜ் நாள்.21.04.2026

**பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.**

**பி.வா.சா.1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1.நான் சேலத்தில் குடியிருக்கிறேன். நான் 68 ஆண்டுகளாக சேலத்தில் தான் குடியிருக்கிறேன். தாவா சொத்து சிக்கசரசம்பாளையம் கிராமத்தில் உள்ளது தான் சரிதான். தாவா சொத்தான சர்வே எண்.648/3ன் பழைய சர்வே எண்.7**C** என்றால் சரியல்ல. 7**C** மற்றும் 10**C** சேர்ந்ததது தான் சர்வே எண் 648/3 ஆகும். சர்வே எண்.648/3ன் சொத்தின் மொத்த வீஸ்தீரணம் எனக்கு தெரியாது. பழைய சர்வே எண்.7**C**ன் மொத்த வீஸ்திரணம் பு.ஏ.2.70 என்றால் சரிதான். மேற்படி பூமி ஆதியில் நஞ்சுகுட்டியம்மாள் என்பவருக்கு கடந்த 17.05.1938 தேதியிட்ட கிரைய வழி பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பு.ஏ.2.70 பூமியை கடந்த 08.07.1965ல் பாட்டாயாள் என்பவருக்கு விற்பனை செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பூமியை கிரையம் பெற்ற பாட்டாயாளுக்கு சின்னப்ப கவுண்டர், நஞ்சப்ப கவுண்டர், நாச்சிமுத்து என்ற 3 மக்கள் உள்ள விபரம் எனக்கு தெரியாது. 13.05.2005ல் பாட்டாயாள் கிரையம் பெற்ற பூமியை தனது 3 மகன்களுக்கு செட்டில்மெண்ட் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

2.அவ்வாறு சின்னப்ப கவுண்டருக்கு செய்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் பழைய புல எண்.7**C**ல் பு.ஏ.1.44 பூமியை செட்டில்மெண்ட் செய்துள்ள விபரம் எனக்கு தெரியாது. நாச்சிமுத்துக்கு பழைய புல எண். 7**C**ல் பு.ஏ.0.76 1/2 பூமியை செட்டில்மெண்ட் செய்துள்ள விபரம் எனக்கு தெரியாது. மேற்படி தேதியில் நஞ்சப்ப கவுண்டருக்கு பழைய புல எண்.7**C**ல் பு.ஏ.0.67 1/2 மற்றும் பு.ஏ.0.39 1/2 பூமியை செட்டில்மெண்ட் செய்துள்ள விபரம் எனக்கு தெரியாது. மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்தின் படி 3 நபர்களும் பழைய புல எண்.7**C**ல் அனுபத்தில் இருந்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தாவா சொத்தான பழைய புல எண்.7**C**ன் புதிய புல எண்.648/3 என்பதையும் அதில் பாட்டாயாளின் மக்கள் செட்டில்மெண்ட் படி அனுபவித்து வருகிறார்கள் என்பதை வழக்கிற்கு பின்பு தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். புல எண். 7**C** பாட்டாயாளுக்கு பாத்தியப்பட்டதாகும். ஆனால்

என்னுடைய புல எண்.10**C**. பழைய புல எண். 7**C**ல் பாட்டாயாள் மற்றும் அவரது 3 மக்களுக்கு உள்ள உரிமை மற்றும் சுவாதீனத்தை ஆட்சேபிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நஞ்சப்ப கவுண்டரிம் இருந்து 30.06.2006ல் வாதி பு.ஏ.1.07 பூமியை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதே போல் நாச்சிமுத்து என்பவரிடம் இருந்து அவருக்கு பாத்தியப்பட்ட பு.ஏ.0.76 செண்ட்டை 13.06.2005ல் வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3.புல எண்.648/3 என்பது புல எண்.648/3**A**2**B**, 648/3**C** என உட்பிரிவாகியுள்ளது என்ற விபரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் 5, 6 ஆண்டுகளுக்கு முன்பு எனது நிலத்தை அளக்க சென்ற போது தெரிந்துகொண்டேன். புல எண்.648/3 என்பது உட்பிரிவாகிவிட்டது என்றால் சரிதான். அதன் பட்டா எண்கள்.2999, 1543, 1544, 748 என நான்கு பட்டாக்கள் உள்ளது. மேற்சொன்ன பட்டாக்காள் புல எண். 7**C** மற்றும் புல எண். 10 **C**க்கு உண்டானது. வாதி பெயரில் பட்டா எண்.2999, 1544 இரண்டு பட்டாக்கள் வாதி பெயரில் தனி பட்டாவாக வழங்கப்பட்டதை தெரிந்துகெண்டோன். ஆனால் அது தவறாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி விபரத்தை 1 வருடத்திற்கு முன்பு எனது நிலத்தை அளக்க சென்றபோது தெரிந்துகொண்டேன். மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளபோது எனது நிலத்தை அளக்க சென்றேனா என்றால் இல்லை. வழக்கிற்கு முன்பாக அளக்க சென்றேன் தேதி வருடம் நியாபகமில்லை. வாதி என்னை அளக்க விடாமல் தடுத்துவிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். புல எண்.10**C**' க்கான புதிய சர்வே எண்.647/4 என்றால் சரியல்ல புல எண்.647/4 மற்றும் 648/3ம் சேர்ந்தது தான் பழைய புல எண்.10**C** ஆகும். 29.04.2004ல் பு.ஏ.4.42 செண்ட்டை ஜாக்ரூன் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். இரண்டு கிரையங்களாக பு.ஏ.1.44 மற்றும் பு.ஏ.2.97 1/2 என கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

4.புல எண்.647/4ல் மொத்த விஸ்தீரணம் பு.ஏ.4.42 என்றால் சரியல்ல பு.ஏ.2.97 1/2 ஆகும். புல எண்.647/4க்கு அரசு ஆவணங்களில் பு.ஏ.4.42 என உள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. புல எண்.647/4க்குண்டான பட்டா எண்.4238 ஆகும். மேற்படி பட்டா தனிப்பட்டாவாக எனது பெயரில் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புல எண்.647/4க்குண்டான பு.ஏ.4.42 பூமிக்கு எனது பெயரில் தனிப்பட்டா உள்ளது என்பது தெரிந்துவிடும் என்பதால் தான் பட்டாவை தாக்கல்

செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற பூமிக்குண்டான மூல ஆவணங்கள் பற்றி தெரிந்துகொண்டோனா என்றால் தெரிந்துகெண்டேன். நான் கிரையம் பெற்ற ஜாக்ரூன் அவர்களின் அப்பா நூர்சாகிப்பிற்கு பாகப்பிரிவினை ஆவணத்தின் படி கிடைத்த சொத்து என்பதை தெரிந்துகொண்டேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.1 ஆவணத்தில் 1980 ஆண்டைய நூர்சாகிப்பின் பாகப்பிரிவினை ஆவணத்தில் பழைய சர்வே எண் 10**C** மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.1ஆவணத்தில் பிதுரார்ஜித வகையில் சொத்துக்கள் பாத்தியப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5.புல எண்.648/3ல் வாதியின் பெயரும் சேர்க்கப்பட்டுள்ளதை எதிர்த்து நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன். கோபிசெட்டிபாளைம் வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்து தள்ளுபடியாகிவிட்டது அதை எதிர்த்து ஈரோடு மாவட்ட வருவாய் அதிகாரியிடம் மேல்முறையீடு செய்துள்ளேன். உத்திரவிற்காக நிலுவையில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் கோபி வருவாய் கோட்டாட்சியர் 29.01.2026ல் பிறப்பித்த உத்திரவின் நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி உத்திரவை எதிர்த்து நான் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டு விபரம் தெரியுமா என்றால் தெரியும். அதன் மேல்முறையிட்டு எண் என்ன என்றால் ஆவணத்தை பார்த்தால் தெரியும். மேற்படி மேல்முறையீட்டு மனுவை தொடர்பான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் தாக்கல் செய்யமுடியும்.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA — Digitally signed by SELVAM SUSILA Date: 2026.04.21 17:06:36 +0530

District Munsif